Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 194/20

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 4 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சரவணன் |
| Father's Name | : | முத்துசுப்ரமணியம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1972 of the day of 26.08.2022

முதல் விசாரணை

நான் கரூர் அண்ணாநகர் 3 வது குறுக்கு சந்தில் குடியிருந்து வருகிறேன். நான் வேன் டிரைவராக வேலை செய்து வருகிறேன். நான் ஈஸ்வரன் கோவில் வேன் ஸ்டான்டில் சரவணன் வேன் டிரேடர்ஸ் என்ற கம்பெனி வைத்து சொந்தமாக வேன் ஓட்டி வருகிறேன். அசா 1 காளியப்பனை எனக்கு தெரியும். அவர் எங்கள் ஸ்டேன்டில் தான் வேன் ஓட்டி வருகிறார். காளியப்பன் அவரது 2 வது மகள் வேலைக்காக அதே ஸ்டான்டில்

S /d K.Ambiga

சரவணன் — நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

சுபம் டிராவல்ஸில் டிரைவர்  வேலை பார்க்கும் பாலமுரளி என்பவர் அரசு வேலைக்காக 10 லட்சம்ரூபாய் பேசி அட்வான்ஸஸாக 4 லட்சத்தை  எதிரி பாலமுரளியிடம் கொடுத்தார். பின் 19.04.2018 ம் தேதி நானும் காளியப்பனும் கரூர் வைஸ்யா பேங்க் எல்என்எஸ் கிளைக்கு சென்று காளியப்பன் கொண்டு வந்த 3 லட்சத்தை அவர் வங்கி கணக்கிற்கு போட்டோம். அவரது வங்கி கணக்கிலிருந்து பாலமுரளி வங்கிற்கு அனுப்பி வைத்தார். அதன்பிறகு 2 வருடங்கள் ஆகியும் வேலை வாங்கி தரவில்லை. பின் கடந்த 12.02.2019 ம் தேதி காலை 10 மணிக்கு கஸ்தூாரி பாய் மருத்துவமனை அருகில் காளியப்பன் வேலையை பற்றி கேட்டதற்கு பாலமுரளி காளயப்பனை பார்த்து கெழட்டு பயலே உனக்கு வேலையும் கிடையாது. பணமும் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டு ஜாக்கி ராடை எடுத்து வந்து இனிமேல் பணம் கேட்க கூடாது. கேட்க வந்தால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். இது சம்மந்தமாக காளியப்பன் போலீசில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S /d K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 194/20

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 5 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | தேவகி |
| Father's Name | : | க/பெ. ராஜேஷ்குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1972 of the day of 26.08.2022

முதல் விசாரணை

நான் கோபி அந்தியூரில் குடியிருந்து வருகிறேன். அசா 1 எனது அப்பா ஆவார். அவர் வேன் டிரைவராக வேலை செய்து வருகிறார். நான் எம்எஸ்சி, பிஎட் முடித்துள்ளேன். எனது அப்பா உடன் வேலை செய்யும் வேன் ஸ்டேன்டில் பழக்கமான சுபம் டிராவல்ஸ் டிரைவரான பாலமுரளி என்பவர் எனக்கு அரசு கலைக்கல்லூரியில் பேராசிரியர் வேலை வாங்கி தருவதாகவும் அதற்க 10 லட்சம் செலவாகும் என்றும்

S /d K.Ambiga

தேவகி நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

அட்வான்ஸஸாக 7 லட்சம் கொடு என்று என் அப்பாவிடம் கேட்டார். அதை நம்பி என் அப்பா முதலில் 4 லட்சத்தை ஈஸவரன் கோவில் அருகில் வைத்து ரொக்கமாக கொடுத்தார். அதன்பிறகு 3 ம் மாதம் 19.04.2018 ம் தேதி கேவிபி வங்கி மூலமாக 3 லட்சத்தை அவரது வங்கி கணக்கிறக்கு அனுப்பிவைத்தார். பின் 6 மாதம் வரையும் அவர் சொன்னது போல் வேலை வாங்கி தரவில்லை. எனது அப்பா வேலை வாங்கி தரவில்லையென்றால் பணம் கொடுத்துவிடுங்கள் என்றார் அதற்கு பாலமுரளி எனது அப்பாவை தகாத வார்த்தையால் திட்டி ராடு மூலமாக அடிக்க வந்ததாக என் அப்பா என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக என் அப்பா போலீசில் புகார்கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S /d K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.